**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**முன்னிலை : திருமதி.கு.புவனேஸ்வரி, பி.எல்.,**
**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருவள்ளூர் @ பூந்தமல்லி**
**2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 7 ஆம் நாள் புதன்கிழமை**

**இ.ம.எண்.2/2025 ன் அசல் வழக்கு எண்.463/2019**

திருமதி. G. ஸ்ரீதேவி

...மனுதாரர்/வாதி

..எதிர்..

திருமதி. E. பொன்னி

... எதிர்மனுதாரர் /பிரதிவாதி

இம்மனு 19.11.2025 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. B. விஜயகார்த்திகேயன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. D. குலசேகரன் ஆகியோர் ஆஜராகியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்ததில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

இம்மனு மனுதாரர்/வாதி தரப்பில் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 7 விதி 14 (3)ன் கீழ் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.01.09 21:47:18 +0530

2. <u>மனுதாரர்/வாதி தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்</u>:–

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவர். வழக்கு அட்டவணை சொத்திலிருந்து எதிர்மனுதாரர் / பிரதிவாதியை வெளியேற்றக் கோரியும், நவம்பர் 2018 முதல் ஜூலை 2019 வரை சட்டவிரோதமான பயன்பாடு மற்றும் கையகப்படுத்துதலுக்காக மாதம் ரூ.20,000/– வீதம் ரூ.1,60,000/– இழப்பீட்டுத் தொகையை கோரியும் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கு விசாரணையின் போது, வாதி வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்தார். 14.06.2012 தேதியிட்ட பொது அதிகார பத்திரம் திரு. கே. காந்தியால் தயாரிக்கப்பட்ட ஒரு வரைவு ரசீது மட்டுமே. மேலும் அது முறையாக கையொப்பமிடப்பட்ட அசல் ரசீதுக்கு பதிலாக தவறுதலாக தாக்கல் செய்யப்பட்டு குறிக்கப்பட்டது. குறிப்பிடப்பட்ட தவறு விருப்பமின்றி ஏற்பட்டதாகும். பிரதிவாதியால் இந்த ரசீதின் செயலாக்கத்தை மறுத்ததாக எதிர்வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை. எனவே அசல் வழக்கில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணத்தை குறியீடு செய்ய அனுமதித்து உத்தரவிட வேண்டும்.

3. <u>எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:–</u>

எதிர்மனுதாரர் / பிரதிவாதி இந்த மனு பத்திகள் 5 மற்றும் 10 இல் கூறப்பட்டுள்ள அனைத்து உறுதிமொழிகளையும் குற்றச்சாட்டுகளையும், பொய்யானவை, அடிப்படையில்லாதவை மற்றும் வழக்கின் நோக்கத்திற்காக மட்டுமே செய்யப்பட்டவை என்று மறுக்கிறார். இந்த மனு சட்டப்படியோ அல்லது உண்மைகளின் அடிப்படையிலோ நிலைநிறுத்த முடியாத ஒன்று. மனுதாரர்/வாதி, 14.06.2012 தேதியிட்ட கட்டணத்தின்

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.01.09 21:47:23 +0530

அசல் ரசீதை ஒரு கூடுதல் ஆவணமாகப் பெற்று, அதைத் தனது தரப்பில் ஒரு சாட்சிய ஆவணமாகக் குறிக்க முயற்சிக்கிறார். 14.06.2012 தேதியிட்ட கட்டண ரசீதின் சேர்க்கை மனுதாரர்/வாதியின் தரப்பில் ஆட்சேபனைக்கு உட்பட்டு, ஏற்கனவே வா.சா.ஆ.10 ஆக குறிக்கப்பட்டுள்ளது. 14.06.2012 தேதியிட்ட கூறப்பட்ட கட்டண ரசீது தொடர்பாக வழக்குரையில் எந்தவொரு வாதங்களும் இல்லை, அதே போல் வா.சா.ஆ.4 ஆக குறிக்கப்பட்ட சட்ட அறிவிப்போ அல்லது சான்று உறுதிமொழி மனுவிலோ கூறப்படவில்லை.

14.06.2012 தேதியிட்ட ரசீதின் சேர்க்கை பிரதி ஏற்கனவே வா.சா.ஆ 10 ஆக குறிக்கப்பட்டிருப்பதால், அசல் ரசீதை மீண்டும் மனுதாரர்/வாதியின் பக்கத்தில் ஒரு சாட்சிய ஆவணமாகக் குறிக்க வேண்டிய தேவையில்லை. மேலும், 14.06.2012 தேதியிட்ட அசல் ரசீது ஏன் வழக்குரைஞர் மனுவுடன் சேர்த்து தாக்கல் செய்யப்படவில்லை என்பதற்கு, இந்த மனுவில் திருப்திகரமான விளக்கம் எதுவும் வழங்கப்படவில்லை. மனுதாரர்/வாதி, இதே போன்ற உறுதிமொழிகளுடன் முன்னர் ஒரு உறுதிமொழி மனு மற்றும் விண்ணப்பத்தை தாக்கல் செய்தார், அவை 09.09.2025 அன்று திரும்பப் பெறப்பட்டன, அதன் பின்னர் தற்போதைய உறுதிமொழி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 14.06.2012 தேதியிட்ட கட்டண ரசீது தொடர்பான வாதங்கள் இல்லாத நிலையில், அதனுடன் தொடர்புடைய எந்த அளவுக்கான சாட்சியமும் பயனற்றது. கூறப்பட்ட ரசீது பெறப்பட்டு ஒரு சாட்சிய ஆவணமாகக் குறிக்கப்பட்டாலும், இந்த மாண்புமிகு நீதிமன்றத்தால் அதை கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாது. எனவே, 14.06.2012 தேதியிட்ட ரசீது,

G
BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.01.09 21:47:28 +0530

மேற்குறிப்பிட்ட வழக்கில் உள்ள சர்ச்சையைத் தீர்ப்பதற்கு இது தொடர்புடையதுமில்லை, முக்கியமான ஆவணமில்லை. எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. <u>தீர்வு செய்யப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்</u>:—

இம்மனு மனுதாரர்களால் கோரப்படும் பரிகாரம் அனுமதிக்கக் கூடியதா? என்பதாகும்.

5. இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

<u>பிரச்சனை:—</u>

6. இருதரப்பும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். வாதி காலி சுவாதீனம் மற்றும் இழப்பீடு பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கானது வா.சா.1 ன் குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்து, வா.சா.ஆ.10 ஆனது அசல் ரசீதுக்கு பதிலாக தவறுதலாக தாக்கல் செய்யப்பட்டு குறிக்கப்பட்டுவிட்டதாகவும் குறிப்பிடப்பட்ட தவறு விருப்பமின்றி ஏற்பட்டது என்றும் எனவே அசல் வழக்கில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணத்தை குறியீடு செய்ய அனுமதித்து உத்தரவிட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள பொருண்மைகள் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மறுத்துரைக்கப்பட்டு எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் 14.06.2012 தேதியிட்ட கட்டண ரசீதின் சேர்க்கை மனுதாரர்/வாதியின் பக்கத்தில், ஆட்சேபனைக்கு உட்பட்டு, ஏற்கனவே வா.சா.ஆ.10 ஆக குறிக்கப்பட்டுள்ளதாகவும், 14.06.2012 தேதியிட்ட கூறப்பட்ட கட்டண ரசீது

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.01.09 21:47:32 +0530

தொடர்பாக வழக்குரையில் எந்தவொரு வாதங்களும் இல்லை என்றும் 14.06.2012 தேதியிட்ட ரசீதின் சேர்க்கை பிரதி ஏற்கனவே வா.சா.ஆ.10 ஆக குறிக்கப்பட்டிருப்பதால், அசல் ரசீதை மீண்டும் மனுதாரர்/வாதியின் பக்கத்தில் ஒரு சாட்சிய ஆவணமாகக் குறிக்க வேண்டிய தேவையில்லை என்றும் மேலும், 14.06.2012 தேதியிட்ட அசல் ரசீது ஏன் வழக்குரையுடன் சேர்த்து தாக்கல் செய்யப்படவில்லை என்பதற்கு, இந்த மனுவில் திருப்திகரமான விளக்கம் எதுவும் இல்லை என்றும் எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ள போதிலும் அசல் வழக்கானது வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில் மனுதாரர் தாக்கல் செய்ய அனுமதிக்க கோரும் ஆவணம் வா.சா.ஆ.10ன் அசல் ரசீது என்கிற நிலையில் அசல் வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டும் முழுமையான தீர்வு காணும் வகையிலும் பல்வகை நடவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டும் நீதியின் நலன் கருதியும் இம்மனுவை அனுமதிப்பது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவில், இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினிமயமாக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 7ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.01.09 21:47:38 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>– இல்லை**

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.01.09 21:47:44 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**<u>வரைவு/தெளிவு உத்தரவு</u>**
**இ.ம.எண்.2/2025 ன்**
**அசல் வழக்கு எண்.463/2019**
**நாள் 07.01.2026**
**2 வது கூ.மா.அ.நீ., பூந்தமல்லி.**